Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC.169/2024 PW-6**

Name : ராஜேந்திரன்
Father / Husband name : அந்தோணிசாமி
Village : செஞ்சி
Age : 52
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 11.03.2026

A1 to A3 absent. Petition u/s 317 CrPC filed and allowed. Both side counsel present.

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது செஞ்சி மதுவிலக்கு அமல்பிரிவு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 09.07.2023 ந்தேதி 20.00 மணிக்கு ரோசணை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலையபொறுப்பிலிருந்தபோது அ.சா.1 நித்தியபிரகாஷ் என்பவர் அளித்த புகாரின் பேரில் பதிவு செய்து வைத்திருந்த சிஎஸ்ஆர் 505/2023 ஐ விசாரணை செய்து நிலைய குற்ற எண் 271/2023, U/s. 341,294(b),506(ii) IPC ன் படி வழக்கு பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு மறுநாள் 10.07.2023 அன்று காலை 10.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் ஆறுமுகம் மற்றும் கிருஷ்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார்செய்தேன். பார்வை மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ 4 மற்றும் 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கின் சம்பவ சாட்சிகளான நித்தியபிரகாஷ், தமிழ்மணி, விஜயகுமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின்

விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என தெரியவர எதிரிகளை தேட எதிரிகள் ராமையா, காந்திமதி ஆகியோர்கள் விழுப்புரம் மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று பிணையில் சென்றிருந்தார்கள். எதிரி சாரதி தலைமறைவாகி இருந்துள்ளார். பின்னர் வழக்கின் விசாரணையை முடித்து எதிரி ராமையா, காந்திமதி மற்றும் தலைமறைவு எதிரி சாரதி ஆகியோர்கள் மீது U/s 341,294(b),506(ii) IPC ன் படி குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. 2வது எதிரிடை புகார் கொடுத்து அந்த வழக்கில் நான் தான் புலன் விசாரணை அதிகாரி என்றால் சரிதான். இரண்டு வழக்குகளில் யார் Aggressor என்று தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன், இருதரப்பிலும் தவறு உள்ளது. ஒரு வழக்கில் நான் புலன் விசாரணை அதிகாரியாக உள்ளதால் மற்றொரு வழக்கை வேறு புலன் விசாரணை அதிகாரிக்கு மாற்றம் செய்யவில்லை என்றால் சரிதான். இரண்டு வழக்குகளிலும் ஒரே புலன் விசாரணை அதிகாரி இருக்கக்கூடாது என்பது நிலையணை என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கின் புகாரில் ஏற்கனவே 2 புகார்கள் கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 2 புகார்களின் உண்மைதன்மை கண்டறிந்து இவ்வழக்குடன் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, மேற்படி இரண்டு வழக்குகளிலும் சிஎஸ்ஆர் பதிவு செய்து நிலம் சம்மந்தமாக வழக்கு என்பதால் நீதிமன்றம் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டது. மேற்படி இரண்டு வழக்குகளின் இறுதி அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை.

2. இந்த வழக்கு பதிவு செய்து முழுப்புலன் விசாரணையும் முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி புகார்கள் சம்மந்தமாக உரிமையியல் வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் உள்ளது.

சம்மந்தப்பட்ட நிலம் யாருடைய பெயரில் உள்ளது என்பதை தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை, அதுசம்மந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது. வழக்கின் புகார் எந்த தேதியில் எத்தனை மணிக்கு கொடுக்கப்பட்டது என்றால் 09.07.2023 அன்று இரவு 08.00 மணி. சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்றால் 08.07.2023 அன்று காலை சுமார் 11.30 மணிக்கு நடந்தது. புகாரில் மேற்குறிப்பு நான் தான் செய்தேன் என்றால் சரிதான். அதில் 10.07.2023 அன்று காலை 15.20 மணி என எழுதி தேதி திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரிலுள்ள மேற்குறிப்பில் தேதி சிஎஸ்ஆர் 505/2020 பதிவு செய்த தேதி திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சிஎஸ்ஆர் 505/2020 தேதி 10.07.2023 காலை 20.00 மணி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், மாலை என்பதற்கு பதிலாக காலை கைத்தவறுதலாக எழுதப்பட்டுள்ளது. உண்மை விவரங்களை மறைத்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3. சம்பவத்தில் அ.சா.1 ன் நண்பர் எடுத்துவந்தது எந்த வகையான டிராக்டர், அதன் பதிவு எண்ணை புகார் மற்றும் அ.சா.1 ன் வாக்குமூலத்தில் உள்ளதா என்றால் இல்லை. நான் சென்றபோது சம்பவயிடத்தில் டிராக்டர் சென்ற தடயம் இல்லை என்றால் சரியல்ல. மாதிரி வரைபடத்தில் டிராக்டர் சென்ற தடயத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீதுள்ள நிலம் சம்மந்தமாக அ.சா.1 பொய் புகார் கொடுத்துள்ளார், அதனை சரிவர விசாரிக்காமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.